## மார்ச் – 24 – தவக்கால 03ம் வார ஞாயிறு

### மனம் மாறாவிட்டால் நீங்களும் அவ்வாறே அழிவீர்கள்'' (லூக்.13:3)

**முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 3:1 – 8,13- 15**

மோசே மிதியானின் அர்ச்சகராகிய தம் மாமனார் இத்திரோவின் ஆட்டு மந்தையை மேய்த்து வந்தார். அவர் அந்த ஆட்டு மந்தையைப் பாலைநிலத்தின் மேற்றிசையாக ஓட்டிக்கொண்டு கடவுளின் மலையாகிய ஓரேபை வந்தடைந்தார். அப்போது ஆண்டவரின் தூதர் ஒருமுட்புதரின் நடுவே தீப்பிழம்பில் அவருக்குத் தோன்றினார். அவர் பார்த்தபோது முட்புதர் நெருப்பால் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அம்முட்புதர் தீய்ந்துபோகவில்லை. "ஏன் முட்புதர் தீய்ந்துபோகவில்லை? இந்த மாபெரும் காட்சியைப் பார்ப்பதற்காக நான் அப்பக்கமாகச் செல்வேன்" என்று மோசே கூறிக்கொண்டார். அவ்வாறே பார்ப்பதற்காக அவர் அணுகி வருவதை ஆண்டவர் கண்டார். "மோசே, மோசே" என்று சொல்லிக் கடவுள் முட்புதரின் நடுவிலிருந்து அவரை அழைக்க, அவர் "இதோ நான்" என்றார். அவர், "இங்கே அணுகி வராதே உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்" என்றார். மேலும் அவர், "உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள்,ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே" என்றுரைத்தார். மோசே கடவுளை உற்று நோக்க அஞ்சியதால் தம் முகத்தை மூடிக் கொண்டார். அப்போது ஆண்டவர் கூறியது எகிப்தில் என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன் அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன் ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு- அதாவது கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு-அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கிவந்துள்ளேன். மோசே கடவுளிடம், "இதோ! இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார் என்று நான் சொல்ல, "அவர் பெயர் என்ன?" என்று அவர்கள் என்னை வினவினால், அவர்களுக்கு என்ன சொல்வேன்?" என்று கேட்டார். கடவுள் மோசேயை நோக்கி, "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" என்றார். மேலும் அவர், "நீ இஸ்ரயேல் மக்களிடம், "இருக்கின்றவர் நானே" என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்" என்றார். கடவுள் மீண்டும் மோசேயை நோக்கிப் பின்வருமாறு கூறினார் "நீ இஸ்ரயேல் மக்களிடம், "உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர்-ஆபிரகாமின் கடவுள்,ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்-என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்" என்று சொல். இதுவே என்றென்றும் என்பெயர் தலைமுறை தலைமுறையாக என் நினைவுச் சின்னமும் இதுவே!

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்

**இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 10 :1 – 6,10-12**

சகோதரர், சகோதரிகளே, நீங்கள் ஒன்றை அறிந்திருக்க வேண்டும் என விரும்புகிறேன். நம் முன்னோர் அனைவரும் மேகத்தின்கீழ் வழிநடந்தனர். அவர்கள் அனைவரும் கடலைக் கடந்து சென்றனர். அவர்கள் அனைவரும் மோசேயோடு இணைந்திருக்கும்படி மேகத்தாலும் கடலாலும் திருமுழுக்குப் பெற்றார்கள். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிக உணவை உண்டனர். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மிகப் பானத்தைப் பருகினர். தங்களைப் பின்தொடர்ந்து வந்த ஆன்மிகப் பாறையிலிருந்து அவர்கள் பருகினார்கள். கிறிஸ்துவே அப்பாறை. அப்படியிருந்தும், அவர்களில் பெரும் பான்மையோர் கடவுளுக்கு உகந்தவராய் இருக்கவில்லை. பாலை நிலத்திலேயே அவர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்கள் தீயனவற்றில் ஆசைகொண்டு இருந்ததுபோல நாமும் இராதவாறு இவை நமக்கு ஒரு முன்னடையாளமாக நிகழ்ந்தன. அவர்களுள் சிலர் முணுமுணுத்தனர். இதனால் அவர்கள் அழிவு விளைவிக்கும் தூதரால் அழிக்கப்பட்டனர். அவர்களைப்போல் நாமும் முணுமுணுக்கக் கூடாது. அவர்களுக்கு நிகழ்ந்த இவையனைத்தும் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக அமைகின்றன. இறுதிக்காலத்தில் வாழும் நமக்கு இவை அறிவுரையாக எழுதப்பட்டுள்ளன. எனவே, தாம் நிலையாக நிற்பதாக நினைத்துக் கொண்டிருப்பவர் விழுந்து விடாதபடி பார்த்துக் கொள்ளட்டும்.

**நற்செய்தி : லூக்கா 13 : 1 - 9**

அக்காலத்தில் சிலர் இயேசுவிடம் வந்து, பலி செலுத்திக் கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான் என்ற செய்தியை அறிவித்தனர். அவர் அவர்களிடம் மறுமொழியாக, "இக்கலிலேயருக்கு இவ்வாறு நிகழ்ந்ததால் இவர்கள் மற்றெல்லாக் கலிலேயரையும் விடப் பாவிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே. அவர்கள் எருசலேமில் குடியிருந்த மற்ற எல்லாரையும்விடக் குற்றவாளிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள்" என்றார். மேலும், இயேசு இந்த உவமையைக் கூறினார் "ஒருவர் தம் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தார். அவர் வந்து அதில் கனியைத் தேடியபோது எதையும் காணவில்லை. எனவே, அவர் தோட்டத் தொழிலாளரிடம், "பாரும், மூன்று ஆண்டுகளாக இந்த அத்தி மரத்தில் கனியைத் தேடி வருகிறேன் எதையும் காணவில்லை. ஆகவே இதை வெட்டிவிடும். இடத்தை ஏன் அடைத்துக்கொண்டிருக்க வேண்டும்?" என்றார். தொழிலாளர் மறுமொழியாக, "ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டுவையும் நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி இல்லையானால் இதை வெட்டிவிடலாம்" என்று அவரிடம் கூறினார்".

**தியானம்:** தவக்காலத்தின் ஞாயிறு வார வார்த்தைகள் எமது மனமாற்றத்தின் முக்கியத்தவத்தை வலியுறுத்தி நிற்கின்றன. மனம்மாறுங்கள் இல்லையேல் அழிந்து போவீர்கள் என்பது அச்சுறுத்தல்தான், ஆனாலும் மனமாற்றத்திற்கு செவிமடுத்தல் அவசியம் என்பது இன்றைய அழைப்பாக இருக்கின்றது. மனமுவந்து மனமாற்றத்திற்கு செவிமடுத்தால் எம்மனதையும் நாம் மாற்றிவிடலாம் என்பது இன்றைய நற்செய்தியில் தெளிவுபடுத்துகின்றது. கடவுள் துன்புறும் ஒவ்வொரு மனிதனுக்காகவும் பரிவு காட்டுபவர். தாம் மனிதனின் வாழ்வில் எவ்வளவு ஆழமான ஈடுபாடும், அக்கறையும் கொண்டிருக்கின்றாரோ அவ்வாறே மனிதன், இறையாட்சி உலகில் செயல்பட தன்னால் இயன்றளவு பங்களிப்பினை செய்யவேண்டுமென எதிர்பார்க்கின்றார். எகிப்தில் சித்திரவதைக்கு உள்ளான இஸ்ராயேலரின் கதறலைக் கேட்டார். அவர்கள் மேல் பரிவுகொண்டு அடிமைத்தனையில் இருந்து அவர்களை மீட்டார். இஸ்ராயேலரின் அவல நிலையைக் கண்டு இரக்கம் காட்டினார். கடவுளின் கருணை உள்ளம் நற்செய்தி உவமையில் வெளிப்படுவதையும் காண்கின்றோம். மனிதின் பயன்தராத காணிக்கையைக் கண்டும் அவன்மேல் மனமிரங்குவதை உவமை மூலம் அறிகினறோம். கடவுளின் பொறுமையும், அவரது தாராள மனத்தையும் அங்கே புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. ''மனம் மாறாவிட்டால் அவ்வாறே நீங்கள் அனைவரும் அழிவீர்கள்'' என்பது எமது ஊனுடலின் அழிவையல்ல மாறாக நமது ஆன்மாவின் அழிவையே குறிக்கின்றார். நாம் மனம்மாற இறைவன் வாய்ப்பளிக்கின்றார். ஆகவேதான் எமது பாவங்களை களைந்து அருள்வாழ்வில் உயிர்க்க தவக்காலம் கரம் நீட்டுகின்றது. பற்றிக்கொண்டு கரை சேர்வோமாக..